1997 ஏப்ரல் 24]

643—

### ஒரு விளக்கு மின் இணைப்பு அளித்தல்

***2623 திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை மக்களுக்கு, வீட்டிற்கு ஒரு விளக்கு மின் இணைப்பு அளிக்க தாசில்தாரிடமிருந்து மறுப்பின்மைச் சான்றிதழ் கோரப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) புறம்போக்கு நிலத்தில் வீடு இருந்தாலும் மின் விளக்கிற்கு இணைப்பு அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த விடை பிப்ரவரி மாதம் இலாக்காவால் கொடுக்கப்பட்ட விடை. இரண்டு தினங்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இசைவோடு, இதிலே ஒரு மாற்றம் செய்து அரசு அறிவித்திருக்கிறது. எனவே, இலாக்காவால் கொடுக்கப்பட்ட விடையை முதலில் படித்துவிடுகிறேன்.

(அ) தற்பொழுதுள்ள விதிகளின்படி, ஏழை மக்களுக்கு அவர்களுடைய சொந்த பட்டா நிலத்தில் கட்டப்பட்டுள்ள குடிசைகளுக்கு ஒரு விளக்கு கொடுக்க மறுப்பில்லாச் சான்றிதழ் கேட்கப்படுவதில்லை.

(ஆ) அரசு புறம்போக்கு நிலங்களில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உரிய அதிகாரிகளிடமிருந்து மறுப்பில்லாச் சான்று பெற்று வந்தால் மின் இணைப்பு வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 644, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.